# நாடக நிகழ்த்துக் கூறுகளின் பொருட்பயன்பாடு

***மு. வடிவேல்***
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்)
தமிழ்த்துறை, நேசமணி நினைவு கிறிஸ்த்தவக் கல்லூரி, மார்த்தாண்டம்
மனோாண்மணீயம் சுந்தரனாார் பல்கலைக்கழகம் திருநெல்வேலி

***முனைவர் ஜெ. அமிதா டார்வின்***
உதவிப் பேராசிரியர்
நேசமணி நினைவு கிறிஸ்த்தவக் கல்லூரி, மார்த்தாண்டம்
மனோாண்மணீயம் சுந்தரனாார் பல்கலைக்கழகம் திருநெல்வேலி

**மலர்: 10**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2022**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v10iS1-Jul.5054

**ஆய்வுச்சுருக்கம்**

1. *பத்தொன்பதாம் நூற்றாண்டு நாடக நிகழ்த்துக் கலையின் இருவேறு நிலைகளைப் பற்றி ஆராய்தல்*
2. *அரங்கப் பொருள் பண்பாட்டைக் கட்டமைத்தல்.*
3. *அரங்க மேடையில் பொருட்களின் பயன்பாடு குறித்தும். பொருட்களின் குறியீடு குறித்தும் உரிய சான்றுடன் விளக்குதல்.*

**முன்னுரை**

தமிழ் மொழியானது இயல்,இசை,நாடகம் என முன்று பெரும் பகுதிகளை உடையது. இது உலகின் வேறு எந்த ஒரு மொழிக்கும் இல்லாத தனிச்சிறப்பாகும்.

எனவே தமிழை பழங்காலம் முதலே படிப்படியாக வளர்ச்சி அடைந்து வந்துள்ளது. “நாடகக் கலை என்பது உலக நிகழ்ச்சிகளைக் காட்டும் கண்ணாடியாகும். பிறர் செய்வதைப் போலத் தாமும் செய்து பார்க்க வேண்டும் என்கின்ற மித உணர்ச்சியே நாடகம் தோன்றக் காரணமாகும்”[1].

ஆகவே, நாடக அரங்கில் பொருள்கள் குறியீடாக மாறி பார்வையாளர்களின் கருத்தும் புலப்பாட்டை வேறொறு கட்டத் திற்கு நகர்த்த மேடையில் பயன்படுத்தப்படும் பொருட்கள் மிகுந்த முனைநிற்பனவாகின்றன. எனவே நாடக நிகழ்த்து கூறுகளுக்கு பொருட்கள் ஏதுவாக துணைநிற்கும் என்பதை பற்றி இவ்வாய்வு விளக்குகிறது.

### நிகழ்த்துக் கலையின் இருவேறு நிலைகள்

நாடகம் என்பது பல்வகை ஒருங்கமைவு பெற்ற கூட்டு நிகழ்த்துக் கலை வடிவம்: இதனுள் புறவய மாக்கப்பட்ட பொருள் சார் கூறுகளின் இயங்கியல் முறைமையிலான ஒத்திசைவு முதன்மையானதாகும். அரங்கப் பொருள் பயன்பாடு குறித்த வரலாற்றை வடிவமைக்க அல்லது மீட்டுருவாக்க அரங்க நிகழ்த்துக் கலையினை இருவேறு நிலைகளில் பகுத்துக் கூறலாம்

1. பொருட்பயன்பாடு
2. கட்புலனாகாப் பயன்பாடு

இத்தகைய இருவேறு நிலைகளும் தம்முள் முரண் நிலை தொடர்பு கொண்டவை.

இவ்வாய்வு அரங்க நிகழ்த்துக் கலையின் பொருட்பயன்பாடுகள் குறித்த வரையறைகளையும்,விளக்கங்களையம் அதனுள் கட்புலனாகக் கதை மாந்தர் உணர்வு நிலைகள் கொள்ளும் முரண் இயக்கத்தையும் வரலாற்று முறையில் பகுத்து மதிப்பிட முனைகிறது.[2]

தமிழ் அரங்க வரலாற்றில். பொருட் பயன்பாடுகளுக்கான உள் வரலாற்று போக்கு ஒன்றும் உறைந்துள்ளது. அரங்க வரலாற்றிற்குள் இழையும் அரங்கப் பொருட் பயன்பாட்டிற்கு என்று நீண்ட வரலாறு ஒன்றும் உள்ளது. இதனை தமிழ் இலக்கிய இலக்கியங்கள் முதற்கொண்டு இன்றைய ஆய்வுப் பரப்பிற்கு உட்பட்ட காலம் வரையில் ஆவணப்படுத்தவும் இவ்வாய்வு முனைகிறது.

### அரங்க பொருட்பண்பாடு

அரங்கத்தில் பயன்படுத்தப்படும் பொருட்களின் புழங்குதளம், புழங்கு முறைமை ஆகியவனற்றைக் கொண்டு அரங்கப் பொருள் பண்பாடு ஒன்றைக் கட்டமைக்க இயலும். இதனை அரங்கு சார் பொருட் பண்பாடு அல்லது பொருளாளுகை என்னும் பதத்தால் குறிக்கலாம் என்பார் பாதல் சர்க்கார். (பாதல் சர்க்கார் நேர்க்காணல்: 2018:22) எந்த ஒரு கருத்தமைவிற்குப் பின்னாலும் ஒரு பொருட் பண்பாடு (material culture) என்ற ஒன்று காணப்படும். அது தனக்கு முன்னால் உள்ள கருத்தியல் போக்கைத் தீர்மானிக்கும்.[3] ஆகவே பொருட்பண்பாடு குறித்த ஆராய்வு என்பது முதன்மையான கவனம் பெறுகிறது. அந்த வகையில் அரங்கப் பொருள் பயன்பாட்டிற்குப் பின் உள்ள பொருட்பண்பாடு நிகழ்த்துக் கூறுகளில் முன்மையான பங்காற்றக் கூடியதாகும்.

### அரங்கப் பொருட் பயன்பாடு

மேடையில் பயன்படுத்தப்படும் பொருட்களை அதன்பயன்பாட்டு நோக்கில் இரண்டாகப் பகுக்கலாம்.

1. மேடை கையாளும் பொருட்கள்
2. மேடையமைப்பு பொருட்கள்

மேடைப்பொருட்கள் என்பவை மேடையில் பொருந்தும் பொருட்களும் நடிகர்கள் மேடையில் உபயோகப்படுத்தும் பொருட்களும். இதனை மேடை கையாளுகை பொருட்கள் (Hand Property) என்னும் அரங்கவியல் கலைச்சொல்லால் குறிக்கலாம்.

மேடையமைப்பில் பதிக்கக் கூடிய நிழற்கண்ணாடி புகைப்படம், மேசை, நாற்காலி போன்றவை மேடைக் காட்சிப் பொருட்கள் இதனை மேடையமைப்புப் பொருட்கள் என்று குறிக்கலாம் (Set Properties or stage Properties)காட்சியமைப்பு பொருட்கள் (Stock Sceneries) காலந்தோறும் மாறக்கூடியவை.4

### அரங்கில் பொருட்களின் குறியீடு

நாடக அரங்கில் காணும் ஒவ்வொரு பொருட்களும் குறியீட்டு இயல்பைக் கொண்டவைகளாக மாறுகின்றன. நாடக அரங்கின் வடிவமைப்பு மேடையிலுள்ள பொருட்களின் இடுகுறித்தன்மையைத்

தாண்டி பண்பாட்டு குறியீட்டினை கொண்டவைகளாக மாற்றும் பணியை நாடக ஒருங்கிணைப்பாளர்கள் உருவாக்குகின்றனர். அந்தப் பொருளுக்கு சமுகப் பொது வெளியில் உள்ள அர்த்தம் அரங்க வெளியில் உறுதிப்படுத்தப்படுகிற வண்ணம் அமைக்கப்படுவது இயல்பாகும். சான்றாக

1. புறா-அமைதி
2. காக்கிதொப்பி-காவலர்கள்

என்பவைகளைச் சுட்டலாம். புறா, காக்கி என்னும் பொருட்களின் குறியீட்டு முறைமை நேரடியானதாகக் காணப்படுகிறது. இவை தாண்டி வண்ணங்கள், விளக்குகள், நடிகர்கள், நடிகைகள் கையில் வைத்துள்ள ஒங்வொரு பொருட்களும் குறிப்பிட்ட அர்த்தங்களை உடையதாக மாறும்.

ஆகவே, இருபதாம் நூற்றாண்டு அரங்க வடிவமைப்பாளர்கள், நடிகர்களின் உடைகள், ஒப்பனை ஆகியவற்றில் கூர்ந்த கவனத்தை செலுத்தினர். அரங்கத்தில் பொருட்கள் குறியீடுகளாக மாறும் நிலைமை குறித்து, தமிழில், ந.ம.வீ, ரவி அவர்களின் அரங் கக்குறியியல் என்னும் நூல் முதன்மையான தொடக்க நிலையிலான பங்களிப்பாகும்.5 ஆங்கிலத்தில் கெயர் எளம் (Keir Elam) அவர்களது குறியியலும் அரங்கமும் என்னும் நூல் நாடக அரங்கிற்கும் குறியலுக்குமான நுட்பமான தொடர்பை விளக்குகிறது. இதனுள் குறியியல் குறித்த அரங்கவியலின் பார்வையிலான வயைறை பின்வருமாறு அமைகிறது.

(semiotics can be defined as a science dedicated to the study of the production of meaning in society. As such it is equally concerned with the process signification and which those of communication. Example the means whereby meanings are both generated and excahanged.

(keir Elam;2:2001)

*(குறியியல் என்பதை, சமுகத்தில் அர்த்தங்களை உருவாக்கும் தொகுதி பற்றிய அறிவியல் பயில்கை என வரையறுக்கலாம். இது தொடர்பாடலுக்கு மிக முதன்மையான பங்களிப்பை நல்குகிறது.)*[6]

(1969 the French linguist georges morning challenged the classification of the, performer spectator bord as a communicator withrelationship`on the grounds to genuine communication of which linguistic exchange is for him the pride example.)

நாடகங்களில் குறியியலையும் தொடர் பாடலையம் குறித்த முதல் ஆய்வாக, பிரெஞ்ச் மொழியியலாளர் ஜார்ஜ் மௌனிங் 1969 இல் தன் கவனத்தைக் குவித்தார். ஆகவே, அரங்கில் பொருள்கள் குறியீடாக மாறி பார்வையாளர்களின் கருத்துப்புலப்பாட்டை வேறொருதளத்திற்கு நகர்த்த மேடையில் பயன்டுத்தப்படும் பொருட்கள் மிகுந்ததுணைநிற்பனவாகின்றன. சான்றாக கிரிஸ்கார்னடின் "நாக மண்டலம்சுசு என்னும் நாடகத்தில் மேடையில் தீபங்கள் எரிகின்றன:" அவை முன்னுக்கு வந்து ஒன்றை பார்த்து ஒன்று கதை சொல்லத் தொடங்குகின்றன் மேடையில் எரியும் அந்த தீபங்கள் தாம் அந்த நாடகத்தின் கதைசொல்லி'கள், மேடையில் காணப்படும் முதன்மையான தீபத்தையே கதை சொல்லியாக மாற்றும் செயல்பாடு நாட்டார் கலைவடிவின் கூறு.

## தொகுப்புரை

இவ்வாறு இருபதாம் நூற்றாண்டு நாடகங்கள் அரங்கப்பொருட் பயன்பாட்டில் கவனத்தைக் குவித்தன. ஆகவே, அரங்கில் பொருட்கள் பயன்பாடு என்பது அரங்க வரலாற்றின் முதன்மையான பயில்வு முறையாக மாறுகிறது. எனவே, அரங்கில் பயன்படுத்தப்படும் பொருட்களின் அரங்கப் பயன்பாட்டு வரலாறு குறித்து இவ்வாய்வுக்கட்டுரை இனங்காண்கிறது.

## குறிப்புகள்

1. அரங்கசாமி. பழனி தமிழ்நாடகம் தோற்றமும் வளர்ச்சியும் தமிழ்ப்பல்கலைக்கழகம் தஞ்சாவூர்

2. நா. அறிவுராஜ் காலம் தோறும் தமிழ் நாடகக் கலை வரலாறு, சாரத பதிப்பகம் சென்னை-2012
3. பாதல் சர்க்கார். (பாதல் சர்க்கார் நேர்க்காணல்: 2018:22)
4. உலகநாதன், செ சங்கரதாஸ் சுவாமிகள் நாடகங்கள் ஆய்வு செழியன் பதிப்பகம், திருத்தணி 1993
5. ரவி,ந,ம, வீ நவீன நாடகங்களும் ஊடகங்களும், உலக தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை.
6. Keir Elam semiotics of theatre and drama,oxford University press 2000.